கள்ளக்குறிச்சி மாவட்டம்- கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்,

சிறுவங்கூர் ஊராட்சி மற்றும் கிராமம்

பொருள்:

மனைப்பிரிவு அனுமதி- கள்ளக்குறிச்சி மாவட்டம்- கள்ளக்குறிச்சி வட்டம்- கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்- சிறுவங்கூர் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் 322/4B1 இல் 0.66½ ஏக்கர் (2678 .0 சதுர மீட்டர்) பரப்பளவில் மனைப்பிரிவு அமைத்தல் அனுமதி வழங்க உத்தரவிடல்- தொடர்பாக.

பார்வை:

1. திரு. K.முருகேசன் த/பெ குப்புசாமி, 95 A , சிவகாமி நகர் லால்புரம் சிதம்பரம் கடலூர் மாவட்டம்
2. இணையதள விண்ணப்ப எண் (DTCP) : **FI08YNCY**
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் இணையதள கோப்பு எண் FI08YNCY/19211/2023/2023/TCP தேதி: 14.12.2023.
4. கள்ளக்குறிச்சி மாவட்டம்- கள்ளக்குறிச்சி வட்டம்-கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்- சிறுவங்கூர் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் 322/4B1- ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ / ந. ஊ. உ. இ. (க. மா) எண்: **085 / 2023**
5. மாவட்ட நகரமைப்பு மற்றும் ஊரமைப்பு அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்ட சாலை அமைப்பு தேதி: 09.12.2023 அன்று வெளியிடப்பட்டது
6. இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, கள்ளக்குறிச்சி மாவட்டம், கடிதம் எண்.A3/7334/2021 நாள்:23.11.2021.
7. விண்ணப்பதாரர்: K.முருகேசன் த/பெ குப்புசாமி கடிதம், மற்றும் தான பத்திரம் (உள்ளாட்சி அமைப்பு) ஆவணம் எண்: 5731/2023 தேதி: 11.12.2023 மற்றும் தான பத்திரம் (TNEB) ஆவண எண்: 5732/2023 தேதி: 11.12.2023.
8. நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குனரின் சுற்றறிக்கை எண் 19799/2020, தேதி: 24.12.2020.
9. அரசாணை எண் 138 ,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2004
10. அரசாணை எண் 79 ,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:04.05.2017.
11. அரசாணை எண் 18 ,நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019

12. அரசாணை எண் 16 ,நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:31.01.2020

13. அரசாணை எண் 141 ,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:23.09.2020

14. அரசாணை எண் 181 ,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:09.12.2020

15. அரசு ஆணை எண். 19113 /Nov 4(3)/2017 - 1 ஊரக வளர்ச்சி துறை நாள்: 30.08.2017 நகர மற்றும் கிராம திட்டமிடல் ஆணையரின் சுற்றறிக்கை, கடிதம் எண். 13686/2017/LA1, தேதி: 08.09.2017

16. நகர் மற்றும் கிராம திட்டமிடல் இயக்குனரின் சுற்றறிக்கை, ROC எண். 320/2022/TCP3, தேதி: 07.01.2022.

17. OSRA கட்டணம் செலுத்தும் கோரிக்கை கடிதம் மற்றும் சென்டேஜ் கட்டணம் செலுத்தும் கோரிக்கை கடிதம், தேதி: 09.12.2023 & 12.12.2023

18. விண்ணப்பதாரர் K.முருகேசன் S/O குப்புசாமி OSRA கட்டணம் செலுத்தும் ரசீது மற்றும் சென்டேஜ் கட்டணம் செலுத்திய ரசீது தேதி: 12.12.2023 & 12.12.2023

19. டவுன் அண்ட் கன்ட்ரி பிளானிங்கின் இயக்குனர் எண். 4367/2019/TCP2, தேதி: 14.08.2021

20. அணுகு சாலை கிரைய பத்திரம் (உள்ளூர் அமைப்பு) ஆவண எண்: 5337/2021, தேதி.29.12.2021 மற்றும் பட்டா எண்:315 இலிருந்து சுற்றறிக்கை.

21. பாகப்பிரிவினை பத்திரம், இணை பதிவாளர் அலுவலகம் கள்ளக்குறிச்சி II புத்தக எண். 1677 வரிசை எண். 13988 தேதி 12.07.2000

**22. சிறுவங்கூர் ஊராட்சி மற்றும் கிராம மன்ற தீர்மான எண்: 155 நாள்: .1.03.2024**

உத்தரவு:

கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறுவங்கூர் கிராமம் சர்வே எண் 322/4B1 இல் 0.66½ ஏக்கர் (2678.0 சதுர மீட்டர்) பரப்பளவில் பட்டா எண் 1386-ல் மனைப்பிரிவு அமைக்க பார்வை 1–ல் காணும் கடிதத்தின்படி விண்ணப்பித்துள்ளார். பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் இணையதள கோப்பு எண் **FI08YNCY/19211/2023** தேதி **05.12.2023**– ன் படி

நிலபயன்மாற்று கட்டணமாக ரூபாய் ரூ.17,500/- ஐ உரிய தலைப்பில் செலுத்தியுள்ளார் மற்றும் ஊராட்சி கூராய்வு கட்டணமாக ரூ.7920/- ம் ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனைகளுக்கு தமிழ் நாடு 1994 ஆம் வருட ஊராட்சிகள் சட்டம் பிரிவு 2(சி)-ன் படியும் பார்வை 2-ல் காணும் அரசாணையின் படி கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

விண்ணப்பதாரர் பெயர் : திரு. K.முருகேசன் த/பெ குப்புசாமி

முகவரி : 95 A, சிவகாமி நகர், லால்புரம், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் 608602.

மனைப்பிரிவு அமையும் இடம் : சிறுவங்கூர் ஊராட்சி / சிறுவங்கூர் கிராமம்

சர்வே எண் : 322/4B1

பரப்பளவு : 0.66 ½ ஏக்கர் (2678.0 சதுர மீட்டர்)

நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,கள்ளக்குறிச்சி அவர்களின் **FI08YNCY/19211/2023** தேதி **05.12.2023** ன் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி அனுமதி வழங்கப்படுகிறது.

2. ஊராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள் பொது ஒதிகீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றம் செய்யக் கூடாது

3. அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்றமனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்க்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

4. பொது பயன்பாட்டிற்காக உள்ளாட்சியில் ஒப்படைக்கப்பட்ட தெருக்கள் மற்றும் பொது இடத்தில எந்த வித மாற்றமும் செய்யக் கூடாது.

5. மனுதாரர் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலையின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6x4 அளவிலான நிரந்தர தகவல் பலகை பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற ஊராட்சி மன்ற தீர்மான எண் தெளிவாக குறிப்பிட்டு தகவல் பலகை வைக்கப்படவேண்டும்.

6. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில அமையும் மனைகளின் மூலைகள் வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அனுமதிக்கப்படவேண்டும்.

ஊராட்சிமன்றத்தலைவர்
சிறுவங்கூர்

தலைவர்
ஊராட்சி மன்றம்
சிறுவங்கூர்